# தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## கணக்கெடுப்பு விவரங்களை வெளியிட்டார் முதல்வர்



**சென்னை, ஆக. 8:** தமிழகத்தில் ஆறு ஆண்டுகளில் யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி, 2017-இல் 2,761 ஆக இருந்த யானைகள் எண்ணிக்கை இப்போது 2,961 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு வனத் துறையானது அண்டை மாநிலமான கேரளம், கர்நாடக மாநில அரசுகளின் ஒத்துழைப்புடன் யானைகள் கணக்கெடுப்பை கடந்த மே மாதம் நடத்தியது. மூன்று நாள்கள் நடந்த இந்தக் கணக்கெடுப்பின் மூலம் பல்வேறு தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தத் தரவுகள் அடங்கிய கணக்கெடுப்பு விவரங்களை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, தமிழகத்தில் யானைகளின் எண்ணிக்கை 2,961-ஆக உயர்ந்துள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலையில் 1,105 யானைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளில் 1,855 யானைகளும் உள்ளன. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் யானைகளின் எண்ணிக்கையை விட மேற்கு தொடர்ச்சி மலைகளில் யானைகளின் எண்ணிக்கை அதிகம் உள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம், தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற அரசின் நடவடிக்கைகள் யானைகள் பெருக்கத்துக்கு காரணிகளாக விளங்குகின்றன என கணக்கெடுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கெடுப்பு அறிக்கை வெளியீட்டு நிகழ்வில், வனத் துறை அமைச்சர் மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாஹு" உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# 'டீப்ஃபேக்' தொழில்நுட்பம் மூலம் மோசடி

## பொதுமக்களுக்கு காவல் துறை எச்சரிக்கை

**சென்னை, ஆக.8:** கைப்பேசியில் 'டீப்ஃபேக்' தொழில்நுட்பம் மூலம் மோசடி நடைபெறுவதால், பொதுமக்கள் உஷாராக இருக்கும்படி தமிழக காவல் துறை சைபர் குற்றப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்தப் பிரிவு செவ்வாய்க்கிழமை விடுத்த செய்திக் குறிப்பு:

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியின் ஒரு பகுதியாக 'டீப்ஃபேக்' (Deep Fake) தொழில்நுட்பம் உள்ளது. இந்த தொழில்நுட்பத்தில் ஒருவர் பேசும் உண்மையான ஆடியோ, விடியோ, புகைப்படங்கள் போன்று மற்றொரு நபர் மூலம் போலியான ஆடியோ, விடியோ, புகைப்படங்களை உருவாக்க முடியும். அதாவது ஒருவரது உருவத்தையும், குரலையும் பயன்படுத்தி மற்றொருவர் நடித்து அவரை போன்ற விடியோவையோ, ஆடியோவையோ உருவாக்க முடியும்.

இந்த தொழில்நுட்பம் திரைப்படத் துறையில் பயன்படுத்தப்பட்டது. தற்போது இந்த தொழில்நுட்பத்தை சைபர் குற்றவாளிகள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இந்த வகை மோசடியில் ஈடுபடும் கும்பல், ஒருவரது புகைப்படம், விடியோ உள்ளிட்டவற்றை சமூக ஊடகங்கள், கறுப்பு சந்தை உள்ளிட்ட வழிகளிலிருந்து பெறுகின்றனர்.

**விடியோ அழைப்புகள்:** பின்னர் அவர்கள், தங்களுக்கு கிடைத்த நபரின் அடையாளங்களை கொண்டு, அவர் பெயரில் போலியான தரவுகளை உருவாக்குகின்றனர். மேலும் டீப்ஃபேக் தொழில்நுட்பம் மூலம் அந்த நபர் பேசுவதுபோன்று விடியோ, ஆடியோக்களை போலியாக தயாரிக்கின்றனர். தற்போது விடியோ அழைப்புகளில் டீப்ஃபேக் தொழில்நுட்பக் கும்பல் கைப்பேசிகளில் நேரடியாக பேசி, பண மோசடியில் ஈடுபடுகிறது.

டீப்ஃபேக் மூலம் போலியாக உருவாக்கும் விடியோ அழைப்புகள் மூலமாக ஒரு நபரின் நண்பர்கள், குடும்பத்தினர், சக ஊழியர்களை தொடர்பு கொண்டு ஆள் மாறாட்டம் செய்து, அவசரமாக பணம் தேவைப்படுவது போல பேசி, பணத்தைப் பெற்று மோசடி செய்கின்றனர். இதில் அந்த நபரின் உருவம், குரல் டீப்ஃபேக் தொழில்நுட்பத்தின் மூலம் போலியாக மிகவும் கவனமாக வடிவமைக்கப்படுவதால், பொது மக்களிடமிருந்து மோசடி கும்பல் பணத்தை எளிதாக அபகரிக்கிறது.

**உடனடியாக புகார் அளிக்கலாம்:** இந்த மோசடியில் இருந்து தப்பிக்க, பொதுமக்கள் தெரியாத எண்களில் இருந்து வரும் விடியோ அழைப்புகளை ஏற்கக் கூடாது. நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள், சக ஊழியர்கள் ஆகியோரிடமிருந்து தெரியாத கைப்பேசி எண்ணில் இருந்து விடியோ அழைப்புகள் வரும் போது, பணப்பரிமாற்றம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டால், எதிர்முனையில் பேசும் நபர் ஏற்கெனவே பயன்படுத்தும் கைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு, அவர்கள் தான் விடியோ காலில் பேசுகிறார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

சமூக ஊடகங்கள், ஆன்லைனில் தனிப்பட்ட தகவல்களை பகிர்வதைத் தவிர்க்க வேண்டும், விடியோ அழைப்பில் சிக்கி பணத்தை இழந்தால், உடனடியாக தமிழக சைபர் குற்றப்பிரிவை 1930 என்ற இலவச தொலைபேசி எண்ணில் புகார் அளிக்கலாம் அல்லது www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் உங்களது புகாரைப் பதிவு செய்யலாம் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY

# தொடரும் வேளாண் இடர்!

உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்று தானியங்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்ந்திருப்பது உண்மை. இன்னொருபுறம் இந்திய விவசாயிகள் வறுமையில் வாடுவதும், கடனாளிகளாகத் தொடர்வதும், தற்கொலை செய்து கொள்வதும் தொடர்கின்றன. வேளாண் துறையில் காணப்படும் இந்த முரண் அகற்றப்பட வேண்டும்.

விவசாயிகளுக்காக வேளாண் காப்பீட்டுத் திட்டம்; 'பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி யோஜனா' மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.6,000 குறு, சிறு விவசாயிகளுக்கு நேரடி மானியம்; குறிப்பிட்ட பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை; மானிய விலையில் உரங்கள்; மாநில வேளாண் அமைச்சகங்கள் மூலம் விதைகள்; இடு பொருள்கள் என்று பல்வேறு உதவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுவது என்னவோ உண்மை. ஆனால், பெரும்பாலும் பருவ மழையை நம்பியிருக்கும் இந்திய விவசாயியின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டுதான் வருகிறதே தவிர, உயர்வதாகத் தெரியவில்லை.

இடைத்தரகர்களும், வியாபாரிகளும் விவசாயிகளின் உழைப்பிலும், அவர்கள் எதிர்கொள்ளும் வறுமையிலும் கொழிக்கிறார்கள். பண்ணையார்களும் நிலச்சுவான்தார்களும் அகற்றப்பட்டிருக்கிறார்களே தவிர, விவசாயிகள் மீதான சுரண்டல் எள்ளளவும் குறைந்தபாடில்லை. கூட்டுறவுப் பண்ணை முறை வெற்றி பெறாததும், விளை நிலங்கள் தலைமுறைக்குத் தலைமுறை பாகப்பிரிவினையால் கூறுபோடப்படுவதும் விவசாயம் லாபகரமாக இல்லாமல் இருப்பதற்கு முக்கியமான காரணம்.

சமீபத்தில் மகாராஷ்டிர மாநிலத்தில் வெளியாகியிருக்கும் ஆய்வு அறிக்கை அதிர்ச்சி அளிப்பதாக இருக்கிறது. 2012 முதல் 2022 வரையிலான 10 ஆண்டுகளில் 8,719 விவசாயிகள் ஔரங்காபாதில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். கடன் தொல்லை, வறட்சி, எதிர்பாராத பருவமழை காரணமாக அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாதது, தங்களது பெண் பிள்ளைகளை திருமணம் செய்து கொடுக்க முடியாதது ஆகியவற்றால் தற்கொலை செய்து கொண்டவர்கள்தான் அதிகம். 1,929 விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்க முடியாததால் தங்களது உயிரை மாய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மகாராஷ்டிரத்தில் மட்டுமல்லாமல், இந்தியாவின் முக்கியமான விவசாயம் சார்ந்த மாநிலங்களில் எல்லாம் வேளாண் இடர் (ஃபார்ம் க்ரைசஸ்) காணப்படுகிறது; தொடர்கிறது. இந்தியாவில் உலகமயமாக்கல் கொள்கையும் பொருளாதார சீர்திருத்தமும் விவசாயிகளின் உழைப்புக்கும், அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியத்துக்கும் இடையேயான இடைவெளியை அதிகரித்திருக்கின்றன. விவசாயிகளின் தற்கொலைகள் 1995-க்குப் பிறகுதான் இந்த அளவுக்கு அதிகரிக்கக் கொடங்கியகு.

ACADEMY

கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கிய இடம்பெயர்தல் அதிகரித்திருப்பது குறித்து அரசியல்வாதிகள், அதிகாரிகள், வியாபாரிகள், தொழிலதிபர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. மொத்த மக்கள்தொகையில் விவசாயத்தில் ஈடுபடுவோரின் விழுக்காடு வேகமாகக் குறைந்து வருகிறது. பிடிவாதமாக விவசாயத்தை தொடர்பவர்களில் பாதிக்குப் பாதி பேர் அடுத்த தலைமுறையில் கிராமவாசிகளாக இருக்கப் போவதில்லை.

1951-இல் இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் 23% விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர் என்றால், 1991-இல் வெறும் 17%-ஆக ஏற்கெனவே குறைந்துவிட்டது. சமீபத்தில் கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. விவசாயிகள் கிராமத்தில் வாழ்பவர்களுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தேசத்திற்கும் உணவு உற்பத்தி செய்பவர்கள் என்பதையும், மேலை நாடுகளைப் போல இயந்திர மயமாதல் இந்தியாவில் எளிதல்ல என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

குறு, சிறு விவசாயிகள் அதிகம் காணப்படும் மாநிலங்களில் தான் விவசாயிகளின் தற்கொலைகள் அதிகம். ஒன்று முதல் இரண்டு ஹெக்டேர் பயிரிடும் சிறு விவசாயிகளின் எண்ணிக்கை 2003-இல் 20.4%-ஆக இருந்தது, இப்போது 24.9%-ஆக 4.5% அதிகரித்திருக்கிறது. அதே நேரத்தில் குறு, நடுத்தர விவசாயிகளின் விகிதம் 14.7%-ஆகக் குறைந்திருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம் குடும்ப பாகப்பிரிவினை.

இந்திய விவசாயிகளில் பாதிக்கும் அதிகமானோர் கடனாளிகள். ஆந்திரம், தெலங்கானாவில் 90% விவசாயிகள் சராசரியாக ரூ. 2.45 லட்சம் கடனைச் சுமக்கிறார்கள். ராஜஸ்தானில் 60% விவசாயிகளும், ஜார்க்கண்டில் 100% விவசாயிகளும் கடனாளிகள். பஞ்சாபிலும், ஹரியாணாவிலும் குறு, சிறு விவசாயிகள் ஒவ்வொருவரும் சுமார் இரண்டு லட்சம் கடன்பட்டவர்கள்.

தேசிய மாதிரி ஆய்வு அறிக்கையின்படி, விவசாயக் குடும்பங்களின் சராசரி மாத வருமானம் ரூ.3,798. அதில் பயிரிடுவதற்காகவும், விவசாயத்திற்காகவும் ஏற்கெனவே ரூ.2,959 செலவாகியிருக்கும். அதனால், அந்தக் குடும்பத்தின் சராசரி மாத வருமானம் ரூ.839 மட்டுமே. அதனால்தான் பிரதமர் நரேந்திர மோடியின் 'பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி யோஜனா' மூலம் குறு, சிறு விவசாயிகளின் வங்கிக் கணக்கு மூலம் நேரடியாக மூன்று தவணைகளாகச் செலுத்தப்படும் ரூ.6,000 அவர்களைக் கவர்ந்திருக்கிறது.

மானியங்களும், உதவித் தொகைகளும், குறைந்தபட்ச ஆதரவு விலைகளும் குறு, சிறு விவசாயிகளின் நிலைமையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. வருமான வரி விலக்கு பெறும் பெருவிவசாயிகள் மட்டுமே இந்தியாவில் முன்பு இருந்த ஜமீன்தார்கள், பண்ணையார்கள், நிலச்சுவான்தார்கள் போல பெரும் லாபம் ஈட்டுகின்றனர்.

கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படாத வரை குறு, சிறு விவசாயிகளின் நிலைமையில் பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டுவிடாது. தேசிய அளவில் இதுகுறித்த பொதுவிவாதம் மேற்கொள்ளப்படுவது உடனடி அவசியம்.

# வன உயிரின குற்றங்களைத் தடுக்க தனி கட்டுப்பாட்டு பிரிவு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, ஆக. 8:** வன உயிரினங்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், கண்காணிக்கவும் தனி கட்டுப்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

இதை சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார். மேலும், அதற்கான இலச்சினையையும் அவர் வெளியிட்டார். இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வன உயிரினங்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்க, தனி கட்டுப்பாட்டு பிரிவு ஏற்படுத்தப்படும் என்று சட்டப் பேரவையில் அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த அறிவிப் பின்படி, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகையில் நிறுவப்பட்டுள்ளது. இந்தப் பிரிவினை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.



தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவை தலைமைச் செயலகத்திலிருந்து செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்து அதற்கான இலச்சினையை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, வனத்துறை செயலர் சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாச ரா.ரெட்டி, வன உயிரின குற்றக்கட்டுப்பாட்டு பிரிவு இயக்குநர் காஞ்சனா.

**பயன் என்ன?:** வன உயிரினங்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் வகையில் பிரத்யேகமாக கட்டுப்பாட்டுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வன உயிரினங்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த தகவல்கள், நுண்ணறிவு விவரங்களைச் சேகரிப்பது, சட்ட விரோதமாக வன உயிரினங்கள் மற்றும் வன உயிரின பொருள்களை விற்பனை செய்வதைத் தடுத்தல் போன்றவை கட்டுப்பாட்டுப் பிரிவின் முக்கியப் பணிகளாகும்.

வன உயிரின குற்றங்கள் தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்படுத்துதல், வனங்களையொட்டி வாழும் பகுதிகளில் உள்ள மக்களிடையே தகவல் கட்டமைப்பை மேம்படுத்துதல், வன உயிரின குற்றங்கள் சார்ந்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ள இடங்களை வரைபடமாகத் தயாரித்தல் ஆகியன இந்தப் பிரிவின் முக்கிய செயல்பாடுகளாகும்.

கட்டுப்பாட்டுப் பிரிவு தொடக்க நிகழ்ச்சியில், வனத் துறை அமைச்சர் மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாஹு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# ஆன்மிகம், ஒற்றுமையை முன்னெடுக்கும் ஆரோவில்

## குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு

**விழுப்புரம், ஆக.8:** ஆன்மிகம், ஒற்றுமையை ஆரோவில் சர்வதேச நகரம் முன்னெடுத்து வருகிறது என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் சர்வதேச நகரத்துக்கு செவ்வாய்க்கிழமை காலை வந்த குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, அங்குள்ள மாத்திரி மந்திருக்கு சென்று பார்வையிட்டார். பின்னர், அந்த வளாகத்தில் மரக் கன்றுகளை நட்டார். தொடர்ந்து, அரவிந்தரின் 150-ஆவது பிறந்த நாள் கொண்டாட்டத்தையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்.

பிற்பகலில் ஆரோவில் பாரத் நிவாஸில் மனதை ஒருநிலைப் படுத்தும் ஆவலுக்கான சூப்பர் மைன்ட் மாநாட்டைத் தொடங்கி வைத்து, குடியரசுத் தலைவர் பேசியதாவது:

அரவிந்தரின் போதனைகள், தத்துவங்கள் உலக மக்களுக்கு உத்வேகம் அளிப்பவையாக உள்ளன. அவரது எண்ணங்களுக்கு வடிவம் கொடுத்தவர் அன்னை என்பதால், இந்த 2 ஆன்மாக்களும் பல கோடி ஆன்மாக்களை வசீகரித்து வழிநடத்தி வருகின்றன.

**அரவிந்தரின் கனவு:** அரவிந்தரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, ராய்ரங்பூரில் உள்ள அரவிந்தர் ஆசிரம கல்வி நிறுவனத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றினேன். அங்கு நான் கற்பித்ததைவிட கற்றுக் கொண்டதே அதிகம். 75-ஆம் ஆண்டு சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில், வருகிற 15-ஆம் தேதி அரவிந்தரின் 150- ஆவது பிறந்த நாள் கொண்டாட்டமும் நடைபெறுகிறது.

ஆன்மிகத்தை இந்தியாவுக்கு பரிசாக கொடுக்க வேண்டும் என்பதும், அதை உலக நாடுகளுக்கு இந்தியா அளிக்க வேண்டும் என்பதும்தான் அரவிந்தரின் கனவு. ஒட்டுமொத்த உலகமும் நமது நாட்டைத் திரும்பிப் பார்க்க வேண்டும் என அவர் குறிப்பிட்டிருந்தார். அதைப்போலவே, உலக நாடுகளில் முன்னோடி நாடாக இந்தியா திகழ்கிறது. பொருளாதாரத்திலும், தகவல் தொழில்நுட்பத்திலும் இந்தியா முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம் என்பதை இந்தியா எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறது. இதுதான் அரவிந்தரின் கருத்துகளாக எதிரொலித்துள்ளது.

ஆரோவில் சர்வதேச நகரத்துக்கு வந்ததை மகிழ்ச்சியாக உணர்கிறேன். இங்குள்ள கட்டுமானங்கள் அன்னை, அரவிந்தரின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றன. அன்னை நினைத்ததைப் போலவே, ஒருங்கிணைந்த நீடிக்க வல்லதாக ஆரோவில் நகரம் அமைக்கப்பட்டுள்ளது.



ஆரோவில் சர்வதேச நகரில் செவ்வாய்க்கிழமை அமைக்கப்பட்ட கண்காட்சியைப் பார்வையிட்ட குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு. உடன், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன், தமிழக அமைச்சர்கள் க.பொன்முடி, செஞ்சி கே.எஸ். மஸ்தான் உள்ளிட்டோர்.

**உலகம் உணர வேண்டும்:** இன்றைய காலகட்டத்தில் ஒற்றுமை, அமைதி, சமத்துவம் என்பதன் சாராம்சத்தை ஒட்டுமொத்த உலகமும் உணர வேண்டும். இது மனிதர்களுக்கு மட்டுமானது அல்ல. மற்ற உயிரினங்கள், இயற்கை உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரபஞ்சத்துக்குமானது. அன்னையின் வழிகாட்டுதலில் ஆரோவில் நகரம் பன்முகம் கொண்ட ஆன்மிக சமுதாயமாக உருவாகியிருக்கிறது. மனித ஒற்றுமையையும், ஆன்மிக வளர்ச்சியையும் இந்த நகரம் முன்னெடுத்துக் கொண்டு வருகிறது.

ஆரோவிலில் கற்றுக்கொண்ட ஆன்மிகம் ஒட்டுமொத்த மனித இனத்துக்கும் பயனளிக்கக் கூடியது. அரவிந்தரின் கருத்துகளும், கோட்பாடுகளும் தற்போது பிரபஞ்சத்தில் நிலவும் பிரச்னைகளுக்கு சமத்துவ முறையில் தீர்வாக அமையும் என்றார் திரௌபதி முர்மு.

முன்னதாக, குடியரசுத் தலைவரை தமிழக ஆளுநரும் ஆரோவில் அறக்கட்டளைத் தலைவருமான ஆர்.என்.ரவி, புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன், ஆரோவில் அறக்கட்டளைச் செயலர் ஜெயந்தி எஸ்.ரவி, தமிழக உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் ஆகியோர் வரவேற்றனர். பத்மஸ்ரீ விருது பெற்ற அருணா சாய்ராமின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

### அரவிந்தர் ஆசிரமத்தில் வழிபாடு

முன்னதாக, புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அரவிந்தர், அன்னை சமாதியில் செவ்வாய்க்கிழமை மலர்தூவி வழிபட்டார். அரவிந்தர் ஆசிரமத்துக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு முற்பகல் 11 மணிக்கு சென்றார். அங்கு அவரை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன், முதல்வர் என்.ரங்கசாமி, அமைச்சர் க.லட்சுமி நாராயணன், ஆசிரம நிர்வாகிகள் வரவேற்றனர்.

ஆசிரமத்தில் ஸ்ரீ அரவிந்தர், அன்னை சமாதிகளில் குடியரசுத் தலைவர் மலர்தூவி வழிபட்டார். அரவிந்தர், அன்னை ஆகியோர் பயன்படுத்திய அறைகளைப் பார்வையிட்டார்.

ஆசிரம நூலகத்துக்குச் சென்ற குடியரசுத் தலைவருக்கு அரவிந்தர், அன்னையின் வரலாறு குறித்து ஆசிரம நிர்வாகிகள் எடுத்துரைத்தனர்.

# கீழடி அகழாய்வில் படிகத்தாலான எடைக் கல் கண்டெடுப்பு

**மானாமதுரை, ஆக. 8:** கீழடி அகழாய்வில் படிகத்தாலான எடைக் கல் செவ்வாய்க்கிழமை கண்டெடுக்கப்பட்டது.



கண்டெடுக்கப்பட்ட படிகத்தாலான எடைக் கல்.

சிவகங்கை மாவட்டம், கீழடி தொல்பொருள் அகழாய்வுத் தளத்தில் 9-ஆம் கட்ட அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக தோண்டப்பட்ட ஒரு குழியிலிருந்து 175 செ.மீ. ஆழத்தில் படிகத்தால் தயாரிக்கப்பட்ட 2 செ.மீ. விட்டம், 1.5 செ.மீ. உயரம், 8 கிராம் எடைக் கல் கண்டெடுக்கப்பட்டது. இந்தக் கல்லின் மேல் பகுதி கோள வடிவில், அடிப் பகுதி தட்டையாக்கப்பட்டு பளபளப்பாக ஒளிபுகும் தன்மையுடன் காணப்படுகிறது.

மேலும், சுடுமண்ணால் செய்யப்பட்ட வட்டச் சில்லுகள், இரும்பு ஆணி, கருப்பு, சிவப்பு நிற பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டதாக தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.

EVA STALIN IAS ACADEMY